DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.380/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | ராமச்சந்திரன் (Lw -  2) |
| Father / Husband  Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 14.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 08.07.2025ம் தேதி 17.30 மணிக்கு சேந்தமங்கலம் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.லெனின் அவர்களின் தலைமையில் நானும், முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோரும் மதுவிலக்கு குற்ற தடுப்பு நடவடிக்கையாக சேந்தமங்கலம் பெருமாபாளையம் காலனி அருகே கண்காணித்து சென்றபோது அங்கு சந்தேகப்படும்படி அங்கு நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட எதிரியை பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் செல்வம் என்றும் அரசு மதுபான பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும், தான் தன்வசம் 180 மி.லி. அளவு உள்ள Express -29 அரசு மதுபான பாட்டில்களை வைத்திருப்பதாகவும் ஒப்புக்கொண்டவரை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.லெனின் 18.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்தார்.

பின்பு எதிரி தானாக முன்வந்த ஆஜர் செய்த 180 மி.லி. அளவு உள்ள Express -29

அரசு மதுபான பாட்டில்களை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.லெனின் 18.30 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(**கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் காவல் உதவி ஆணையாளர் (கலால்) அவர்களுக்கு அனுப்பி வைத்தார். பின்பு எதிரி மீது சேந்தமங்கலம் காவல்நிலைய குற்ற எண்.158/2025-ன் சட்டபிரிவுகள் 4(1) (C) TNP Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளன என்றால் சரிதான். எதிரி சாக்குப்பையில் மதுபானங்களை வைத்திருந்தாக கூறியுள்ள நிலையில் சாக்குபையை கைப்பற்றினேமா என்றால் இல்லை. எதிரி மதுபான பாட்டில்களை எந்த கடையில் வாங்கினார் என்பதை குறித்து யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**